# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 | தை 08 | செவ்வாய்க்கிழமை | 21.01.2025 | கதிர் 103







# எனக்கு எதிராகப் பெரும் சதி! சுமந்திரனை விசாரியுங்கள்!!

## நாடாளுமன்றில் சிறீதரன் கோரிக்கை



பொழும்பு, ஜன21

"இந்தியா சென்ற என்னைக் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலைத்தில் தடுத்து நிறுத்தியமைக்குப் பின்னால் பெரும் சதியுள்ளது. அது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந் திரனிடம் விசாரணை நடத்த வேண்டும்." – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். நாடாளுமன்றத்தில் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற அமர்வி–ன்போதே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கனடாவில் உள்ள தடை செய்யப்பட்ட அமைப்புடன் கலந்துரையாடவே நான் சென்னை செல்ல இருந்த தாகவும், அதனாலேயே விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் சுமந்திரன் தனியார் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார் மேற்குறித்த விடயம் 7 ➤

## அரசியல் கைதிகளை வைத்து அரசியல் நடத்த இடமளியோம்

### அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு உறுதி



கொழும்பு, ஜன. 21

"அரசியல் கைதிகள் என்று சொல்லப்படுபவர்களை வை-த்து அரசியல் நடத்த இடமளிக்க மாட்டோம். அவர்களை 7 ➤

## நினைவேந்தல் குறித்து இனிமேல் அதிக கவனம்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 21

நினைவேந்தல் என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் இனிமேல் 7 ➤

## அர்ச்சுனா எம்.பியைக் கைது செய்ய அனுராதபுரம் நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு, ஜன. 21

போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ்அதிகாரிகளின்கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றத்துக்காக யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவைக் 7 ➤

## கைதடியில் தோட்டக் கிணற்றில் இருந்து தொப்புள் கொடியுடன் சிசுவின் சடலம் மீட்பு



யாழ்ப்பாணம், ஜன 21

யாழ்ப்பாணத்தில் தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து தொப்புள் கொடியுடன் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கைதடி பகுதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து இன்று செவ்வாய்க்கிழமை காலை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தோட்டத்துக்குச் சென்ற விவசாயிகள் கிணற்றினுள் சிசு ஒன்றின் சடலம் மிதப்பதாகச் சாவகச்சேரி 7 ➤

## ஆதிகோவிலடியில் கரையொதுங்கிய மிதவை

வல்வெட்டித்துறை, ஜன. 21

யாழ். வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி கடற்கரையில் மிதவை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இன்று காலை குறித்த மிதவை கரையொதுங்கியுள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

வட பகுதி கடற்பரப்பில் அண்மைக் காலமாகப் பல்வேறு சிலைகள், மிதவைப் படகுகள், மர்ம வீடுகள், கப்பல்கள் என்பன கரையொதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வடக்கு மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜன 21

2ICFS (International Centre for Foreign Studies) சர்வதேச வெளிநாட்டு கற்கை மையம் ஏற்பாடு செய்துள்ள " Education யாழ்ப்பாணம்" ஏழாம் அமர்வு ஜனவரி 25ம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை Hotel Jetwing Jaffna வில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு வடக்கு மாகாணத்தில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு இங்கிலாந்து ,அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, , கனடா, மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் உள்ள கல்வி தொடர்பான தெரிவுகளையும், விருப்பங்களையும் ஆராய்வதற்கான வாய்ப்புகளை வழங்கும் முயற்சியின் ஏழாவது கட்டமாகும்.

"நுனரஉயவழைெ யாழ்ப்பாணம்" நிகழ்ச்சித் திட்டத்தின் சிறப்பு அம்சம் தலைநகர் மற்றும் கற்கை வசதிகளை கொண்ட பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புகளை, வடக்கு மாகாணத்திலுள்ள தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுடன் பகிர்ந்து கொள்வதேயாகும். இலங்கையர் அனைவருக்கும் சமமான கல்வி கிடைக்க ICFS எப்போதும் உறுதிபூண்டு செயலாற்றி வருகின்றமை குறிப்பிடக்கூடியதாகும்.

இம்முறை விஷேடமாக ICFS உடன் விண்ணபபிக்கும் மாணவர்களுக்காக 1000 GBP புலமைப்பரிசில்கள் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது



இங்கு முதன்மைப்படுத்தப்படுகின்ற கற்கைகளுக்காக நாடுகள் பாரிய பணச் செலவுகளை ஏற்படுத்தாத வகையிலும், நிதி பங்களிப்புகள் சலுகை அடிப்படையில் வசதிகளை ஏற்படுத்தும் வகையிலும் அறிமுகப்படுத்துகின்றன. குறிப்பாக மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்கள், விண்ணப்பதாரர்களின் வசதியைக் கருத்திற் கொள்வதுடன் இந்தச் சந்தர்ப்பம் "நுனரஉயவழைெ யாழ்ப்பாணம்" மூலம் கிடைக்கும் தனித்துவமான வாய்ப்புகளாகும்.

இலங்கையில் தங்களுடைய குடும்பத்தை விட்டு வெளியேறத் திட்டமிடாத அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் Research Master options அவர்கள் சார்ந்து நிற்கின்றவர்களுடன் (Dependent Visa) இங்கிலாந்துக்குச் செல்லும் வாய்ப்பை அவர்கள் அறிமுகப்படுத்த முனைகின்றார்கள்.

ICFS வடக்கில் உள்ள அனைத்து திறமையான மற்றும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இந்த அரிய வாய்ப்பை அதிகபட்சமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறது.

அங்கு நீங்கள் இது தொடர்பிலான தொழில் வல்லுநர்களைச் சந்தித்து ஐஊகுளு உடன் வெளிநாட்டில் கல்வியைத் தொடர உங்கள் எதிர்கால இலக்கை அடைவதற்கான வரைவை இங்கு சமர்ப்பிக்க முடியும். ஐஊகுளு இன் இந்த செயலமர்வுக்கு எந்தவித நுழைவுக் கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது என்பதையும், ICFS இன் ஆலோசனைகளுக்கு எவ்வித கட்டண வசூலிப்பும் இல்லை (No consultant fees) என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது வடக்கில் உள்ள தகுதியான மாணவர்களுக்கு ஒரு விலைமதிப்புல்ல வாய்ப்பாக அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)



## கோழி இறைச்சி விற்பனையில் மாற்றம்

கொழும்பு, ஜன 21

மக்களுக்கு போதுமான வருமானம் இல்லாததால், நாட்டில் தினசரி கோழி இறைச்சி விற்பனை 100 மெறறிக் தொன் குறைந்துள்ளதாக இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் எச். குணசேகர தெரிவித்துள்ளார்.

வழக்கமாக ஒரு நாளைக்கு 600 மெற்றிக் தொன் கோழி இறைச்சி விற்பனை செய்யப்பட்டாலும், தற்போது 500 மெற்றிக் தொன் இறைச்சியே விற்பனையாகின்றது.

கோழி இறைச்சிக்கான தேவை குறைந்து வருவதால், இறைச்சி மற்றும் முட்டையின் விலைகளில் சரிவு ஏற்பட்டுள்ளது.

கோழி மற்றும் முட்டை விலைகள் குறைந்துள்ளதால், கோழி பண்ணை உரிமையாளர்கள் தங்கள் உற்பத்தி செலவுகளை ஈடுகட்ட முடியாமல் தவித்து வருவதாகவும் அவர் கூறினார்.

(ஐ)

## விபத்தில் யுவதி உயிரிழப்பு

கொழும்பு, ஜன 21

தலாத்துஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் யுவதி உயிரிழந்ததுடன், மேலும் மூவர் படுங்காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



கண்டி மஹியங்கனை பிரதான வீதியில் மயிலப்பிட்டி கீழ்பிரிவு பகுதியில் இவ்விபத்து, திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

கட்டுகஸ்தோட்டை பகுதியிலிருந்து மாரக்ஷன உடுதெனிய பகுதியை நோக்கி சென்ற முச்சக்கரவண்டி ஒன்றும், மயிலப்பிட்டி பகுதியிலிருந்து கண்டி பகுதியை நோக்கி சென்ற பாடசாலை சேவை பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.


இவ் விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதி மற்றும் அதில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவரில் 18 வயது மதிக்கதக்க மகள் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததோடு, தந்தை மற்றும் மற்றுமொருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி ரிகலகஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதோடு, மேற்படி உயிரிழந்த யுவதியின் சடலம் மாரஸ்ஸன வைத்தியசாலையில் வைக கப்பட்டுள்ளது.

குறித்த முச்சக்கரவண்டி முன்னே சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளையிலேயே எதிரே வந்த பஸ்சுடன் மோதியதன் காரணமாக இவ் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. எனினும் இவ்விபத்துக்கு காரணமாக இருந்த பஸ் சாரதியை தலாத்துஓயா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலாத்துஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## 225 எம்.பிக்களுக்கும் வாகனங்கள்



கொழும்பு, ஜன 21

பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் எதிர்காலத்தில் வாகனங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்கப்படாது என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

(ஐ)

## யானை துரத்தியதில் மூன்று பெண்கள் காயம்

கொழும்பு, ஜன 21


கொக்குத்தொடுவாய் தெற்குப் பகுதியில் யானை துரத்தியதில் கண்ணிவெடி அகற்றும் மூன்று பெண் பணியாளர்கள் காயமடைந்துள்ளனர். முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்த் தெற்கு கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட வேம்படி சந்தியில் இருந்து வெலிஓயா செல்லும் பாதை பகுதியில் காட்டுப்பகுதிக்குள் கண்ணிவெடிப் பிரிவை சேர்ந்த 10 பேர் கொண்ட குழு நேற்று வேலை செய்து கொண்டு இருந்துள்ளது.

அந்தப் பகுதியில் திடீரென யானை ஒன்று வந்து அவர்களைத் துரத்தியுள்ளது. யானைக் கண்டவுடன் பயத்தில் பணியாளர்கள் ஓடியுள்ளனர். அதன் போது 3 பெண் பணியாளர்கள் காயமடைந்துள்ளார்கள்.

காயமடைந்த மூவரும் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

## மின்சார வேலியில் சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு!



*கண்டியில் மின்சார வேலியில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*கண்டி, கடுகண்ணாவை பிர தேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.*

*மேற்படி நபர் கொட்டகேதெனிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு நேற்று சென்றபோது காணியைச் சுற்றி சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரிழந் துள்ளார்.*

*இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தே கநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இது தொடர்பான மேலதிக விசார ணைகளை தவுலகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்*

# “நான் மஹிந்த என்று அனுரவுக்குத் தெரியாது”

கொழும்பு, ஜன 21

நான் எல்லாவற்றையும் பார்த்திருக்கிறேன். அரசியல் பழிவாங்கல் முதல் துன்புறுத்தல் வரை, எனது அரசு இல்லம் என்னிடமிருந்து பறிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி நினைத்தால், நான் வெளியேறத் தயாராக இருக்கிறேன். அவர் எனக்கு எழுத்துப்பூர்வ கோரிக்கையை அளிக்கட்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



மிகவும் கொடூரமான காலங்களில் 10 ஆண்டுகள் நாட்டை வழிநடத்திய ஜனாதிபதியாக, முன்னாள் அரச தலைவராகவும் எனது பாதுகாப்பிற்காகவும் அரசியலமைப்பு ரீதியாக எனக்கு இந்த வீடு வழங்கப்பட்டது.

சாமானிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தனது மக்கள் தொடர்பு சாகசங்களிலும், மேடையில் சொல்வதிலும், முன்னாள் ஜனாதிபதிகளை விமர்சிக்கும் வார்த்தைகளைக் கட்டவிழ்த்துவிடுவதிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொழும்பில் உள்ள தனது அதிகாரப்பூர்வ இல்லத்தை எந்த நேரத்திலும் காலி செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினார். மேலும், பொது மேடைகளில் சென்று தனக்காக விளம்பரம் பெற முயற்சிப்பதை விட, எழுத்துப்பூர்வ அதிகாரப்பூர்வ கோரிக்கையை அனுப்புமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி திசாநாயக்க, ராஜபக்சேவை தனது அதிகாரப்பூர்வ இல்லத்தை காலி செய்யுமாறு அல்லது அதற்கு மாதந்தோறும் ரூ.4.6 மில்லியன் வாடகை செலுத்துமாறு கேட்டு பொது உரை நிகழ்த்திய ஒரு நாளுக்குப் பிறகு டெய்லி மிரருக்கு பேட்டி அளித்த முன்னாள் ஜனாதிபதி, மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் அமைச்சரவை முடிவின்படி தனது அதிகாரப்பூர்வ இல்லம் தனக்கு வழங்கப்பட்டது என்றும், அது அவரது பாதுகாப்பிற்காகவும், முன்னாள் அரச தலைவராக அரசியலமைப்பு ரீதியாக அவருக்கு உரிமையுடனும் வழங்கப்பட்டது என்றும் கூறினார்.

இருப்பினும், ஜனாதிபதி வளாகத்தை விட்டு வெளியேறியதன் மூலம் பயனடைந்தால், அவர் எதையும் வலுக்கட்டாயமாக வைத்திருக்கவில்லை என்பதால், அதை காலி செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். தான் இப்போது ஒரு தலைவராக இருந்தாலும், அவரது நடத்தை எதிர்க்கட்சியில் இருந்த ஒரு அரசியல்வாதியைத் தவிர வேறில்லை என்றும் அவர் திசாநாயக்கவுக்கு நினைவூட்டினார்.

“நான் மஹிந்த ராஜபக்ஷ என்பதை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மறந்து விடுகிறார். அவரது பேச்சுக்கள் மேடைக்கு நல்லது, மேலும் அவர் தனது பொய்யான தேர்தல் வாக்குறுதிகளைப் போல குடிமக்களை தவறாக வழிநடத்துவதும் நல்லது என்றாலும், அவர் எழுத்துப்பூர்வ கோரிக்கையை எனக்கு அனுப்பினால் எனது அதிகாரப்பூர்வ இல்லத்தை காலி செய்ய நான் தயாராக இருக்கிறேன் என்பதை ஜனாதிபதியிடம் தெரிவிக்க விரும்புகிறேன்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட பிறகும், மிகவும் கொடூரமான காலங்களில் 10 ஆண்டுகள் நாட்டை வழிநடத்திய ஜனாதிபதி என்ற முறையிலும் விஜேராம மாவத்தையில் உள்ள இந்த இல்லத்தை நான் பெற்றேன்,” என்று ராஜபக்ஷ கூறினார். சாமானிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக, ஜனாதிபதி திசாநாயக்க தனது மக்கள் தொடர்பு தந் திரங்களில் அதிக ஈடுபாடு கொண்டிருந் தார், மேடையில் சென்று, முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு மற்றும் வீடுகளை எடுத்துக் கொண்டு அவர்களை விமர்சிக்க வார்த்தைகளை வெளியிட் டார், தனது சொந்த தோல்விகளைப் பற்றி பேசுவதைத் தவிர்ப்பதற்காக மேடை களில் விளையாடினார் என்றும் ராஜபக்ஷ கூறினார்.

“நான் எப்போதும் தேசத்திற்காக உழைத்த ஓர் அரசியல்வாதி மற்றும் தலைவர். போரை முடிவுக்குக் கொண்டுவருவது முதல் வளர்ச்சியைக் கொண்டுவருவது வரை, நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் கொண்டு வந்த வளர்ச்சியால் நாடு இன்று பயனடைகிறது. போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான எனது முயற்சிகளையும் நான் கையை முத்திட்ட வளர்ச்சித் திட்டங்களையும் எனது வாரிசுகள் விமர்சித்தனர். சிலர் இந்தத் திட்டங்களை நிறுத்தவும் முயன்றனர், இது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கடுமையாகப் பாதித்தது,” என்று ராஜபக்ஷ கூறினார். “அரசியல் பழிவாங்கல் முதல் துன்புறுத்தல் வரை அனைத்தையும் நான் பார்த்திருக்கிறேன். ஜனாதிபதி திசாநாயக்க எனது அரசு இல்லத்தை என்னிடமிருந்து பறிக்க வேண்டும் என்று நினைத்தால், நான் வெளியேறத் தயாராக இருக்கிறேன். எதையும் வலுக்கட்டாயமாக வைத்திருக்க வில்லை. அவர் எனக்கு அதிகாரப்பூர்வ கோரிக்கையை அனுப்பட்டும்,” என்று அவர் கூறினார். (ஐ)

# போதைப் பொருளுடன் இருவர் கைது



கொழும்பு, ஜன 21

குஷ் போதைப் பொருளை நாட்டுக்குள் கடத்தி வந்த ஆணொருவரும் பெண்ணொருவரும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். பாங்காக்கில் இருந்து வந்த ஆணிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், 3 கிலோ 750 கிராம் குஷ் கைப்பற்றப்பட் டுள்ளது.

அதேவேளை, அந்த விமானத்தில் பயணித்த பெண்ணிடம் இருந்து 2 கிலோ 880 கிராமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

31 வயதான ஆண், மகாஓயா பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் 29 வயதான பெண் கட்டுவன பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# 4 லொறிகள் விபத்து! மூவருக்குக் காயம்!!



கொழும்பு, ஜன 21

யாழ்ப்பாணம், மதவாச்சி, ஏ-9 வீதியில் கல்கண்டேகம கல்லூரிக்கு முன்பாக செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில், லொறி யொன்று மேலும் மூன்று லொறிகளுடன் மோதியதில் இருவர் காயமடைந்துள்ளதாக புனே பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற மூன்று லொறிகள் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது, பின்னால் வந்த மற்றொரு லொறி, சம்பந்தப்பட்ட லொறிகளுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக புனே பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் நான்கு லொறிகளும் சேதமடைந்ததாகவும், லொறிகளில் பயணித்த இரண்டு பேருக்கு லேசான காயம் ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவர்கள் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து குறித்து புனே பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புற்றுநோய் தடுப்பூசி ரூ.370 ஆக விலை குறைப்பு

கொழும்பு, ஜன 21

ஒரு காலத்தில் ரூ.76,000க்கு விற்கப்பட்ட புற்றுநோய் தடுப்பு மருந்து தற்போது ரூ.370 ஆக குறைக்கப்பட்டுள்ளது என, வைத்தியத்துறை வட்டாரங்கள் டெய்லி மிரருக்கு உறுதிப்படுத்தின.

ஆதாரங்களின்படி, 2018 ஆம் ஆண்டில், குறித்த தடுப்பு மருந்தின் அதிகபட்ச சில்லறை விலை ரூ.76,000 ஆக இருந்தது, பின்னர் அது ரூ. கடந்த ஆண்டு 54,000 ரூபாயாக குறைக்கப்பட்டது.

புதிய அரசாங்கத்தின் கீழ், மூன்று புதிய விநியோகத்தர்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், ஒரே நிறுவனம் முன்பு வைத்திருந்த ஏகபோகத்தை முடிவுக்கு கொண்டு வந்த பிறகு, விலை ரூ.370 ஆக குறைந்தது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி அண்மையில் கருத்து வெளியிடுகையில், சுகாதார அமைச்சினால் மாதந்தோறும் பல பில்லியன் ரூபா பெறுமதியான காலாவதியான மருந்துப்பொருட்கள் அழிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

“இந்த மருந்துகள் அகற்றும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக புத்தளம் சீமெந்து தொழிற்சாலைக்கு எரிப்பதற்காக அனுப்பப்படுகின்றன,” என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

# கல்குடாவில் 16 விவசாயிகள் மீட்பு



கொழும்பு, ஜன 21

அடைமழை வெள்ளத்தில் சிக்கி இருந்த 16 விவசாயிகள் கல்குடா அனர்த்த அவசர சேவை மீட்பு அணியினால் மீட்கப்பட்டு கரைசேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விவசாயில் கிடைச்சிமடு, ஆத்துச்சேனை பிரதேச வயல்களில் சிக்கி இருந்ததுடன், வயற்பிரதேசங்களுக்கான பாதைகளும் முற்று முழுதாக வெள்ளநீரால் சூழப்பட்டிருந்தன.

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிரின் வழிகாட்டலில், பிரதேச சபையின் செயலாளர் எஸ்.எம்.சஹாப்தீனின் உதவியுடன் சமூகச்செயற்பாட்டாளரும் கல்குடா டைவர்ஸின் ஆலோசகருமான முபாறக் ஹாஜியார் தலைமையில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# முல்லைப் பெரியாறு அணை நீரின் அளவை 120 அடியாகக் குறைக்கக் கோரி கேரளாவில் மனு

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்ய நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்றும், அணையில் தேக்கி வைக்கும் நீரின் அளவை 120 அடியாக குறைக்கவும் வலியுறுத்தி கேரளாவை சேர்ந்த வழக்கறிஞர் மேத்யூ நெடும்பாரா உள்ளிட்டோர் மனு தாக்கல் செய்து உள்ளனர்.

இந்த மனு உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வர உள்ள நிலையில் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மதுரையை சேர்ந்த வழக்கறிஞர் ஸ்டாலின் என்பவர் மனு தாக்கல் செய்துள்ளார்.

முல்லைப் பெரியாறு அணை மிகவும் பாதுகாப்பாக உள்ளது என்று பல்வேறு ஆய்வுகளை நடத்திய பிறகு உச்ச நீதிமன்றம் 2014-ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கி உள்ளது.

136 அடியில் இருந்து 142 அடியாக நீர்மட்டத்தை உயர்த்தவும் உத்தரவு பிறப்பித்துள்ளது. 6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டால் சென்னை, மும்பை, டெல்லி போன்ற நகரங்களுக்கும் கூட ஆபத்து ஏற்படும். இந்த அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டால் அணைக்கு பாதுகாப்பு இல்லை என்ற வாதத்தை ஏற்க முடியாது.

இதனைக் கருத்தில் கொண்டு மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்து மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மனுவில் கோரிக்கை விடப்பட்டு உள்ளது.



# சத்தீஸ்கரில் இரு பெண்கள் உட்பட 14 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை



சத்தீஸ்கரில் நடந்து வரும் நக்சல் ஒழிப்பு நடவடிக்கையில் இன்று 14 நக்சலைட்டுகள் பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கரியாபண்ட் மாவட்டத்தில் சத்தீஸ்கர்-ஒடிசா எல்லையில் உள்ள மெயின்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காட்டில் நேற்று இரவும் இன்று அதிகாலையும் பாதுகாப்புப் படையினருக்கும் நக்சல்களுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 14 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

என் கவுண்டரை உறுதிப்படுத்திய கரியாபண்ட் காவல் கண்காணிப்பாளர் நிகில் ரகேச்சா, திங்கள்கிழமை மாலை மெயின்பூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட காடுகளில் நக்சல் எதிர்ப்பு நடவடிக்கையின் போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இரண்டு பெண் நக்சலைட்டுகளின் உடல்கள் மீட்கப்பட்டன. கொல்லப்பட்ட நக்சலைட்டுகளின் ஆயுதங்களும் கைப் பற்றப்பட்டன. வெடிமருந்துகள் மற்றும் ஐஇடி-கள், செல்ப்-லோடிங் ரைபிள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

அவர்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது. துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ஒரு கோப்ரா ஜவான் வீரருக்கு ராய்ப்பூரில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து இன்று அதிகாலை முதல் நடந்து வரும் துப்பாக்கிச்சூட்டினால் நக்சல் பலி எண்ணிக்கை 14 ஆக உயர்ந்-துள்ளது. தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடந்து வருவதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது.

## பெண் டாக்டர் கொலை வழக்கு

# குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் – அரசு மேல்முறையீடு





கொல்கத்தா ஆர்.ஜி.கர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பெண் பயிற்சி டாக்டர் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட வழக்கில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என மேற்கு வங்காள அரசு மேல் முறையீடு செய்துள்ளது.

பெண் டாக்டரை பாலியல் வன்கொடுமை செய்து கொன்றதாக பொலிஸாருக்கு உதவும் தன்னார்வலராகப் பணியாற்றிய சஞ்சய் ராய் என்பவரை பொலிஸார் கைது செய்தனர். சியால்டா கோர்ட்டில் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி அனிர்பன் தாஸ் முன்பாக, இந்த வழக்கு விசாரணை நடந்தது.

இந்த வழக்கில் சஞ்சய் ராய் குற்றவாளி என்று நீதிபதி அனிர்பன் தாஸ் தீர்ப்பளித்தார். தண்டனை விவரம் நேற்று அறிவிக்கப்பட்டது. குற்றவாளி சஞ்சய்ராய்க்கு சாகும் வரை சிறை தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு அளித்தார். குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மேற்கு வங்காள முதல்-மந்திரி மம்தா பானர்ஜி இந்த தீர்ப்பு குறித்து கூறும்போது, இந்த தீர்ப்பை எதிர்த்து மாநில அரசு கொல்கத்தா ஐகோர்ட்டை நாடும். இது மரண தண்டனைக்கு தகுதியான ஒரு கொடூரமான குற்றம் என்று நான் உறுதியாக உணர்கிறேன் என்றார்.

இந்த நிலையில் குற்றவாளிக்கு வழங்கப்பட்ட சாகும் வரை சிறை தண்டனையை எதிர்த்து மேற்கு வங்காள அரசு கொல்கத்தா ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்துள்ளது. குற்றவாளிக்கு தூக்கு தண்டனை விதிக்க வேண்டும் என்று மேல் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளது.

# 145 நிமிடங்கள் முடங்கும் டில்லி விமான நிலையப் பணிகள்




டில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வ தேச விமான நிலையம் வருகிற 26-ஆம் திகதி வரை தினந்தோறும் 145 நிமிடங்கள் அதன் ஓடுபாதையை மூடுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26-ஆம் திகதி 75-வது குடியரசு தின விழா கொண்டாடப்படுகிறது.

இதற்காக டில்லியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. அணி வகுப்பு மற்றும் நிகழ்ச்சிக்கான ஒத்திகை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், .குடியரசு தினத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக, காலை 10.20 மணி முதல் மதியம் 12.45 மணி வரை மூட திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 1,300-க்கும் மேற்பட்ட விமானங்களின் சேவைகள் பாதிக்கப்படும் என கூறப்படுகிறது.

ஏற்கனவே டில்லியில் நிகழும் மூடு பனி காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.









# சந்ததிக்கு புகலிடம் தேடும் தாய்க் குயிலின் சாகாசம்!

## சுவாரஸ்ய உயிரியல்

நம்மில் பலரும் காகத்தின் கூட்டில், அதற்கே தெரியாமல் தன்னுடைய முட்டையை வைத்துவிட்டுச் செல்லும் குயில் பற்றிய கதைகளைக் கேட்டிருப்போம். ஆனால், இந்தச் செயற்பாட்டின் இயக்கவியல் குறித்து நாம் யாருமே கேள்வி கேட்டதோ, அறிந்துகொள்ள முற்பட்டதோ இல்லை.

இனப்பெருக்கம் தான் பூமியில் வாழ்கின்ற அசையும் உயிர்கள், அசையா உயிர்கள் என்று அனைத்திற்குமான அடிப்படை ஆதாரமாக இருந்து வருகின்றது. பரிணாமத்தின் பாதையில், இங்குள்ள அனைத்து வகையான உயிரினங்களும் ஏதாவதொரு வகையில் தம் இனத்தைப் பெருக்குவதில்தான் முதல் கவனம் செலுத்துகின்றன. அதற்கான வேலையில், முன்னேற்பாடுகளில், புதியதாகப் பிறந்தனவற்றை அணுகுவதில் என்று அனைத்திலுமே உயிர்கள் வேறுபட்டிருக்கின்றன. அதிலும் முட்டையிடும் குடும்பத்தைச் சேர்ந்த பறவையினங்களில் பல வகைகள் உள்ளன.

அதாவது கூடுகட்டி முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் பறவைகளுடைய கூடுகளைச் சார்ந்து, தம் குஞ்சுகளை வளர்க்க வேறு பறவையினத்தைச் சேர்ந்த தாய்ப் பறவையைச் சார்ந்து இருக்கின்ற பறவைகளும் இருக்கின்றன. அவற்றின் வாழ்வியலும் அவை சார்ந்திருக்கும் பறவைகளுடைய வாழ்வியலும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

தன் முட்டையை அடைகாத்து, அது பொறித்த பிறகு, குஞ்சுகள் பறக்கத் தொடங்கும் வரை கவனித்து, உணவளித்துப் பராமரித்துக் கொள்ளும் வேலையை, நேரத்தை தன்னுடையதாக எடுத்துக் கொள்ளா மல், வேறு பறவையின் கையில் அந்தப் பொறுப்பை ஒப்படைத்துவிடுகின்றன. அப்படிப்பட்ட பறவைகளை ஹபாராசிடிக் பறவைகள்' என்றும் இந்த முறையை ஹபாராடிசிசம்' என்றும் அறிவியல் துறையில் அழைக்கின்றனர். இதை ஒட்டுண்ணித் தன்மை என்று தமிழில் அழைக்கின்றனர். அதாவது, வாழ்விற்காக, பிழைத்திருப்பதற்காக மற்ற உயிரினங்களைச் சார்ந்து வாழும் உயிரினத்தின் வாழ்வியல் முறை. தாவரங்களில் ஒரு மரத்தைச் சார்ந்து காளான் உட்படப் பல்வகைச் சிறு தாவரங்கள் முளைப்பதைப் பார்த்திருப்போம். அவை, அந்த மரத்தின் ஊட்டச்சத்துகளில் குறிப்பிட்ட அளவை எடுத்துக்கொண்டு வாழக்கூடியவை. தனக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துகளுக்காக, அது முளைத்திருக்கும் மரத்தைச் சார்ந்திருப்பவை. அதேபோல, பறவைகளில் இளம் குஞ்சுகளைப் பராமரித்து, வளர்க்கும் வேலையை இன்னொரு பறவையிடம் விட்டுவிடுவனவற்றை பாராசிடிக் பறவைகள் (ீயசயளவைஉ டிசைன) என்றும் அவை சார்ந்து வாழ்கின்ற பறவையை ஒம்புயிரி (Host bird) என்றும் அழைக்கின்றனர்.

அதற்கு நம் கண்முன்னே இருக்கின்ற சிறந்த உதாரணம் காக்கையும் (Host bird) குயிலும்தான் (ீயசயளவைஉ டிசைன).

இந்திய காட்டுயிர் ஆராய்ச்சி மையத்தில் (Centre for Wildlife Studies) ஆய்வு மாணவராகவுள்ள டின்சி மரியாம் (Dincy Mariyam) இதுகுறித்த ஆய்வில் ஈடுபட்டிருந்தார். இருவேறு பறவையினங்கள் இதுபோன்ற வாழ்வியலில் ஈடுபட்டிருப்பதைப் பற்றி, குயில் மற்றும் காக்கையின் வாழ்வியலை உதாரணமாக வைத்து விளக்குகின்றார்.

இத்தகைய பரிணாம வளர்ச்சி, குயில் போன்ற ஒம்புயிரிப் பறவைகளை, தம் எதிர்காலச் சந்ததிகளை வளர்ப்பதற்காக நேரம் செலவிடுவதைத் தடுத்து, சிறிது புத்திசாலித்தனமாகச் செயற்படும் திறனைக் கொடுத்துள்ளன. அதன்மூலம் அவற்றுக்கு அதிக நேரம் கிடைத்து, இன்னும் அதிகமாக இனப்பெருக்கத்தில் ஈடுபடுகின்றன. இத்தகைய இனப்பெருக்க ஒம்புயிரிகள் குறித்து மனிதர்களுக்கு நீண்ட காலமாகவே தெரிந்துள்ளது. ஆனால், அதற்கான காரணம்தான் நீண்ட காலமாகவே புரியாமலிருந்தது.

டின்சி மரியாம், சித்தூர் பகுதியில் அவர் ஆய்வு செய்த கிராமங்களில், அதற்கான விடையைத் தேடத் தொடங்கினார். ஒரு காகத்தையும் இனப்பெருக்கத்திற்காக அதைச் சார்ந்திருந்த ஆசியக் குயிலையும்



அவர் கண்காணித்தார். நம்மில் பலரும் காகத்தின் கூட்டில், அதற்கே தெரியாமல் தன்னுடைய முட்டையை வைத்துவிட்டுச் செல்லும் குயில் பற்றிய கதைகளைக் கேட்டிருப்போம். ஆனால், இந்தச் செயற்பாட்டின் இயக்கவியல் குறித்து நாம் யாருமே கேள்வி கேட்டதோ, அறிந்துகொள்ள முற்பட்டதோ இல்லை. பருவமழைக் காலம் தொடங்கும்போதே காகங்களின் இனப்பெருக்கக் காலமும் தொடங்கிவிடுகின்றது. அந்தக் காலகட்டம் ஓகஸ்ட் வரை நீளும். குயில்களுடைய இனப்பெருக்கக் காலம் மார்ச் மாதம் தொடங்கி செப்ரெம்பர் வரை நீளும். இரண்டின் இனப்பெருக்கக் காலகட்டமும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் வருகின்றது.

இனப்பெருக்கத்தில் ஈடுபட்ட பிறகு, குயில் காக்கையின் கூட்டில் முட்டையிட்டு விடுகின்றது. முட்டையுடைய நிறம் மற்றும் வடிவத்தில், காகத்தின் முட்டையோடு குயிலுடையதும் ஒத்திருக்கும். குயில்களைப் போலவே, மற்ற கூடுகளைச் சார்ந்திருக்கும் பறவைகளுடைய முட்டைகளும்கூட, அவை எந்தப் பறவையினத்தைச் சார்ந்திருக்கின்றதோ அதன் முட்டை வடிவத்தையும் நிறத்தையும் ஒத்திருப்பதாக ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். உதாரணத்துக்கு, அக்கா குயில் (உழஅஅழெ யறம உரஉமழழ) என்றழைக்கப்படும் ஒருவகைக் குயில் இனம், தவிட்டுக் குருவியின் கூட்டில் முட்டையிடும். அதன் முட்டையும் தவிட்டுக் குருவியின் முட்டையும் வடிவத்திலும் நிறத்திலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். தங்களுடைய முட்டைகளை இதுபோல் அடைகாக்கவும் வளர்க்கவும் இதர பறவையினங்களைச் சார்ந்திருக்கும் பறவைகள், இப்படியாக பரிணாம வளர்ச்சியடைந்துள்ளன. சுடலைக் குயில் (pied cuckoo) என்றழைக்கப்படும் ஒருவகைக் குயில் இனம், சின்னான் வகையைச் சேர்ந்த கேப் புல்புல் (cape bulbul) என்ற பறவையுடைய கூட்டில் முட்டையிடும். ஆனால், அதன் முட்டையும் சின்னானுடைய முட்டையும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இருந்தாலும், அதைச் சின்னான் தவிர்க்காமல், அடைகாத்து தன்னுடைய குஞ்சுகளைப் போலவே கவனித்துக் கொள்கின்றன. இருப்பினும், ஹஹஆசியக் குயில்களைப் போல, காக்கை முட்டைகளையொத்த வடிவத்தில் ஆள்மாறாட்டம் செய்து வைப்பதுதான் அதிகமாக நடக்கின்றன. அப்படி நிகழும்போது, எது தன்னுடையது, எது ஆள்மாறாட்டம் செய்து மறைத்து வைக்கப்பட்ட முட்டை என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் காகத்தைப் போன்ற ஒம்புயிரிப் பறவைகள் குழம்பிவிடுகின்றன" என்று குறிப்பிடுகிறார் டின்சி மரியாம்.

காக்கை சராசரியாக ஒரு நாளைக்கு ஒன்று என்ற விகிதத்தில், மொத்தம் 5 முட்டைகளை இடும். ஆசிய குயிலும்கூட, இந்த ஐந்து நாள்களுக்கு உள்ளாகவே, அதன் கூட்டில் முட்டையிட்டு விடுகின்றது. ஒரு வேளை காக்கை முட்டையிடுவதற்கு முன்னமே, குயில் முட்டையிட்டு வைத்தால், அதைக் கண்டுபிடிப்பது எளிதாகிவிடும். அதனால், குயில்கள், காக்கைக்கு அடுத்தபடியாக வந்து முட்டையிட்டு வைக்கின்றது. அதன் முட்டை, காகத்தினுடையதைவிட ஓரளவுக்குச் சிறியதாக இருக்கும். அதனால், அதை அடைக்காக்க வேண்டிய காலமும் குறைவாகவே இருக்கும். அதைக் கண்காணிக்கத் தொடங்கிய டின்சி மரியாம், காகம் இட்ட முட்டைகளையும் குயில் இட்ட முட்டைகளையும் குறித்து வைத்துக்கொண்டு, சற்று தள்ளி, அவற்றுக்குத் தெரியாமல் அமர்ந்து, தன்னுடைய தொலைநோக்கியில் கண்காணிக்கத் தொடங்கினார்.

இதுபோன்ற ஆள்மாறாட்ட முட்டையிடுதல்களைத் தடுக்க, காகம் போன்ற பறவைகள் சில தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. சில நேரங்களில் முறையாகக் கண்காணித்து, அப்படி முட்டையிட வந்தால் தாக்குகின்றன. இல்லையேல் சில நேரங்களில், எச்சரிக்கை ஒலிகளை எழுப்புவது, கூட்டை மறைவாக அமைப்பது, மிக மூர்க்கமாக எல்லையைக் காவல் காப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுகின்றன. இருந்தும், இவையனைத்தையும் தாண்டி குயில்கள் முட்டையிட்டுவிடுகின்றன.

காகங்கள் ஜோடியாகவும் கூட்டைக் காவல் காக்கின்றன, சில நேரங்களில் அவை சிறு கூட்டமாக வும்கூட காவல் காக்கின்றன. இனப்பெருக்கக் காலங்களில் காகங்கள் கூட்டு சேர்ந்து ஒற்றுமையாகச் செயற்படும் பழக்கத்தைக் கொண்டவை. இத்தகைய பழக்கங்களை, அவற்றிடம் ஆள்மாறாட்ட வேலைகளில் ஈடுபடும் குயில்களிடமிருந்து தற்காத்துக்கொள்ள அவை மேற கொள்கின்றன. மரமல்லி (7ஆம் பக்கம் பார்க்க..)

# உலக சுகாதார அமைப்பில் இருந்து விலகுகிறோம்

## டொனால்டு டிரம்ப் அதிரடி



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்ள செய்யும் நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் உலக அமைப்பிலிருந்து விலகுவதாக அமெரிக்கா இரண்டாவது முறையாக உத்தரவிட்டுள்ளது.

குடியேற்றம் முதல் வெளியுறவுக் கொள்கை, பேச்சு சுதந்திரம், காலநிலை மாற்றம் வரையிலான பிரச்சினைகள் குறித்து இரண்டாவது முறையாக அதிபராக பதவியேற்ற டிரம்ப் ஆயிரக் கணக்கான நிர்வாக நடவடிக்கைகளில் கையெழுத்திட்டார்.

தனது முதல் பதவிக் காலத்தின் இறுதி ஆண்டில் உலகளாவிய சுகாதார நெருக்கடியாக உருவெடுத்த கொரோனா பெருந்தொற்றுக்கு உலக சுகாதார அமைப்பு செயல்பட்ட விதத்திற்கு 2020-ம் ஆண்டு டொனால்டு டிரம்ப் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

"உலக சுகாதார அமைப்பு அமெரிக்காவிடம் இருந்து நியாயமற்ற முறையில் கடுமையான தொகையை தொடர்ந்து கோருகிறது. இது மற்ற நாடுகளின் மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடும்போது மிகவும் அதிகம். 1.4 பில்லியன் மக்கள்தொகை கொண்ட சீனா, அமெரிக்காவை விட 300 சதவீதத்தை மக்கள் தொகை கொண்டுள்ளது. ஆனால் உலக சுகாதார அமைப்புக்கு கிட்டத்தட்ட 90 சதவீதம் குறைவாகவே பங்களிக்கிறது," என்று உலக சுகாதார அமைப்பில் இருந்து விலகுவது குறித்து அமெரிக்கா கூறியுள்ளது.

டிரம்பின் உத்தரவைத் தொடர்ந்து உலக சுகாதார அமைப்பு நூற்றுக்கணக்கான மில்லியன் டாலர் நிதியை இழக்க உள்ளது.

## ஜனவரி 20ஆம் திகதி தான் அமெரிக்கவுக்கு விடுதலை நாள் டிரம்ப் தெரிவிப்பு



*ஜனவரி 20-ஆம் திகதி தான் அமெரிக்கவுக்கு விடுதலை நாள் என டிரம்ப் தெரிவித்துள்ளார்.*

*அமெரிக்காவின் 47-வது அதிபராக டொனால்டு டிரம்ப் பதவியேற்றார். இதன்பின்னர் பொதுமக்களுக்கு அவர் ஆற்றிய உரையில், ஜனவரி 20-ஆம் திகதி தான் அமெரிக்கவுக்கு விடுதலை நாள். அமெரிக்காவின் பொற்காலம் தொடங்குகிறது. உலகம் மதிக்கப்படும் அமெரிக்கா மாறும். இதுவரை இல்லாத அமெரிக்காவைக் கட்டமைப்பேன்*

*என்னுடைய உயிர் ஒரு காரணத்திற்காகவே காக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவை சிறந்ததாக மாற்றுவதற்காகவே கடவுள் என்னுடைய உயிரை காப்பாற்றியுள்ளார்." என்றார்.*

*எனது வெற்றி அமெரிக்கா முழுமைக்கும் ஆனது. அமெரிக்கர்களின் பாதுகாப்பு மீட்டெடுக்கப்படும். அமெரிக்காவுக்கே முதலில் முன்னுரிமை என்பதைச் செயல்படுத்துவேன். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உத்தரவுகள் கையெழுத்திட உள்ளேன்" என்று கூறினார்.*

## தைவானில் நிலநடுக்கம்



தைவானில் நில நடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.4ஆக பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தைவானில் நளளி ரவில் தாக்கிய நில நடுக்கமானது யூஜிங்கிற்கு வடக்கே 12 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டிருந்ததாகவும் இதன்போது தெரிவிக்கப பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்களின் கூரைகள் இடிந்து விழுந்ததாகவும், 27 பேர் படுகாயமடைந்ததாகவும், பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது. நள்ளிரவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் பீதி அடைந்த மக்கள் சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். தைவானில் கடைசியாக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 7.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 25 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப்பெரிய நிடுநடுக்கம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலநடுக்கத்தால் ஹவாலியனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலச்சரிவுகள் மற்றும் கட்டிடங்களை கடுமையாக சேதப்படுத்தியதுடன் 17 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுகிறது - டிரம்ப்



பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்வதாக அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்.

உலகில் அதிகளவு கார்பன் மாசு ஏற்படுத்தும் நாடான அமெ ரிக்கா காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து விலகும் முடிவு, புவி வெப் பமயமாதலை எதிர்த்து போரிடும் உலகளாவிய முயற்சிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்றும் அமெரிக்காவை அதன் நெருங் கிய கூட்டாளிகளிடம் இருந்து விலக செய்யும் என்று கூறப்படுகிறது.

அமெரிக்காவின் அதிபராக இரண்டாவது முறையாக திங்கள் கிழமை பதவியேற்ற அதிபர் டொனால்டு டிரம்ப் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். முன்னதாக கடந்த 2017-ஆம் ஆண்டு அதிபர் பதவியில் இருந்தபோதும் டிரம்ப் இதேபோன்ற அறிவிப்பை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

2015 பாரிஸ் ஒப்பந்தம் தன்னார்வமானது. இது நிலக்கரி, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை எரிப்பதன் மூலம் ஏற்படும் பசுமை வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான இலக்குகளை நாடுகளே வழங்க அனுமதிக்கிறது.

அந்த இலக்குகள் காலப்போக்கில் மிகவும் கடுமையானதாக மாறும், நாடுகள் புதிய தனிபட்ட திட்டங்களை பெப்ரவரி 2025-க்குள் அறிவிக்க வேண்டும் என்ற காலக்கெடுவை எதிர்கொள்கின்றன.

சமீபத்தில் வெளியேறிய ஜோ பைடன் தலைமையிலான நிர்வாகம் 2035 ஆம் ஆண்டுக்குள் அமெரிக்க பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை 60 சதவீதத்திற்கும் அதிகமாகக் குறைக்கும் திட்டத்தை கடந்த மாதம் வழங்கியது.

## கைதடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாருக்கு அறிவித்தனர். இதையடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எனக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் சுமந்திரனை விசாரித்தால் இது தொடர்பான செய்திகள் எந்த ஊடகங்களில் வந்தது என்பதை அறியமுடியும்.

ஆனால், சுமந்திரனை நான் சென்னையில் கண்டபோதும் அவர் என்னிடம் இது பற்றி எதுவும் கேட்கவில்லை.

எனவே, இவ்வாறு விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டது எனக்கு எதிராக நடத்தப்பட்ட திட்டமிட்ட சதியாகவே நான கருதுகின்றேன்.

நீங்கள் சுமந்திரனை விசாரித்தால் இதற்குரிய உண்மையைக் கண்டறிய முடியும்." - என்றார்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைசெய்ய நடவடிக்கை எடுப்போம்." - என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கே.எம்.ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"அரசியல் கைதிகள் என்று சொல்லப்படுபவர்கள் தொடர்பில் நீதி அமைச்சர் தெரிவித்த கருத்தை சிலர் மீண்டும் அரசியலாக்கியுள்ளனர். உண்மையில் நீதிமன்ற வழக்குகளில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு தமிழர்களைத்தான் அரசியல் கைதிகள் என்று ஒரு தரப்பினரும், புலிகள் அமைப்பின் சந்தேகநபர்கள் என்று இன்னொரு தரப்பினரும் கூறி வருகின்றனர்.

அப்படியானவர்களில் 10 பேர் வரை தற்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான வழக்குகளை ஆராய்ந்து அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம். எனவே, அரசியல் கைதிகள் என்று சொல்லப்படுபவர்களை வைத்து அரசியல் நடத்த இடமளிக்கமாட்டோம்." - என்றார்.

## நினைவேந்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிக கவனம் செலுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கே.எம்.ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "உயிழுந்த தமது உறவுகளை நினைவேந்த எந்த இனத்தவர்களுக்கும் முழு உரிமையுண்டு. அதை எமது அரசு தடுத்து நிறுத்தாது.

ஆனால், வடக்கு, கிழக்கில் சில நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் தலையீடு ஆதிக்கம் செலுத்துவதால் அது வெளியில் வேறொரு கோணத்தில் பார்க்கப்படுகின்றது. தெற்கில் உள்ள ஒரு தரப்பினர் அதைப் பயங்கரவாதக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர். இதனால் வடக்கு - தெற்கு அரசியலவாதிகளுக்கிடையில் பொது வெளியில் கருத்து மோதல்கள் இடம்பெறுகின்றன.

எனவே, நினைவேந்தல் என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் இனிமேல் அதிக கவனம் செலுத்தப்படும். நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்துவது எமது நோக்கம் அல்ல." - என்றார்

# சந்ததிக்குப் புகலிடம் தேடும்...



மற்றும் புளிய மரத்தில் கட்டப்பட்டிருந்த காக்கைக் கூடுகளை டின்சி மரியாம் கண்காணித்துக் கொண்டிருந்தார். மறைவிடத்திற்குப் பஞ்சமில்லாத, அருமையான இடத்தில்தான் அவை கூடு கட்டியிருந்தன. இந்நிலையில், அவர் கண்காணித்துக் கொண்டிருந்த கூட்டில், எப்போதும் ஒரு காகம் இருந்துகொண்டேயிருக்கும். மற்றொரு காகம்தான் உணவு தேடிச் சென்றது. அந்த நேரங்களில், கூட்டைக் காவல் காக்கும் காகத்திற்கு உணவு கொண்டு வந்து கொடுக்கும் வேலையைக்கூட வெளியே செல்லும் காகமே ஏற்றுக்கொண்டது.

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் இத்தகைய ஒருங்கிணைந்த செயற்பாட்டைக் காண முடிகின்றது. பெரும்பாலும் காகங்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து இதுபோன்ற நேரங் களில் செயற்படுகின்றன. அவை, ஒரு குழுவாகச் சேர்ந்து தாய்க் காகம் வெளியே செல்வதற்கான நேரத்தைக் குறைக்க உதவுகின்றன. உணவு கொண்டுவந்து கொடுப்பது, உணவு ஊட்டுவது போன்றவற்றை அவை மேற்கொள்கின்றன. அதன்மூலம், குயில்கள் ஆள்மாறாட்டம் செய்வதிலிருந்து காகங்கள் தம் கூட்டைத் தற்காத்துக் கொள்கின்றன. அப்படிப்பட்ட நேரங்களில், ஏதேனும் பெண் குயில் கூட்டின் பக்கமாகப் பார்த்தாலும்கூட, தாய் காகம் துரத்தத் தொடங்கிவிடுவதை டின்சி மரியாம் கவனித்துள்ளார். இருந்தும், இவையனைத்தையும் மீறி குயில் அந்தக் காகத்தின் கூட்டில் முட்டையிட்டதையும் அவர் கவனித்துள்ளார்.



எது குயிலுடையது, எது தன்னுடையது என்ற குழப்பம் வந்துவிடுவதால், எதையும் உடைக்காமல் அனைத்தையுமே காக்கைகள் அடைகாக்கின்றன.

காகம், குயில் போல இரண்டு தரப்பு பறவைகளுமே ஒன்றையொன்று சமாளித்து, தம் இனத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான தகவமைப்பைக் கொண்டுள்ளன. காகம், தன்னுடைய கூட்டிற்கே மிகுந்த எச்சரிக்கையோடும் கண்காணிப்போடும்தான் சென்று வந்தது. அதேநேரம், குயிலும்கூட அது முட்டையிட நினைக்கும் கூட்டைக் கண்காணிப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகின்றது. பெண் குயிலுடைய உடல், மரங்களுக்கு மத்தியில் மறைந்து கொள்ளும் நிறத்தை ஒத்து இருப்பதால் அவை எளிதில் மரங்களுக்கு நடுவே மறைந்துகொள்கின்றன.

இப்படியெல்லாம் கடினப்பட்டு காக்கையின் கூட்டைச் சென்றடையும் குயில், முட்டையிடுவதை அவர் கவனித்துள்ளார். ஹஹஇரண்டு காகங்களும் வெளியே சென்றிருந்த நேரத்தில், வெற்றிகரமாக ஒரு குயில் அதன் கூட்டிற்குள் சென்றதை நாங்கள் பார்த்தோம். அப்படிச் சென்ற சில நிமிடங்களிலேயே, காகங்கள் சுதாரித்து துரத்தியடித்துவிட்டன. அங்கிருந்து தப்பித்து, நான் அமர்ந்திருந்த திசை நோக்கித்தான் அது பறந்து வந்தது. அப்போது, அதன் அலகில் ஒரு முட்டையைக் கவ்வியிருந்தது. பின்னர் காக்கைக் கூட்டைச் சோதித்துப் பார்த்தபோது, ஒரு முட்டை குறைந்திருப்பதைக் கண்டுபிடித்தோம். வெற்றிகரமாக அது ஒரு முட்டையைக் கூட்டிலிருந்து அப்புறப்படுத்திவிட்டது. ஆனால், அந்த இடத்தில் வேறு முட்டையை இடவில்லை. அதற்கு அடுத்த நாள் காலையில் நாங்கள் சென்று கவனித்த போது, அந்த இடத்தில் புதிதாக ஒரு குயில் முட்டையைக் கண்டோம். முந்தைய நாள், முட்டையைத் திருடிச் சென்ற குயில்தான் அதை அங்கு வைத்திருக்க வேண்டும்" என்று அவர் தன்னுடைய ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

இப்போது, அங்கிருப்பதில் எது குயிலுடையது, எது தன்னுடையது என்ற குழப்பம் காக்கைக்கு வந்துவிடும். எங்கே, தன்னுடையதை உடைத்துவிடுவோமோ என்ற சந்தேகத்தில் அனைத்தையும் அடைகாக்கின்றன. தன்னுடைய அனைத்து முட்டைகளையும் ஒரே கூட்டில் வைத்தால், ஆபத்து என்பதைக் குயில்கள் நன்கு உணர்ந்திருக்கின்றன. ஆகவே, பல்வேறு கூடுகளில் வைக்கின்றன. அப்படி வைக்கும்போது, அது வைக்கின்ற முட்டைகளுடைய எண்ணிக்கைக்கு நிகரான முட்டைகளை உடைத்துவிடுகின்றது. அப்படிச் செய்வதன் மூலம், அந்தக் கூட்டிலுள்ள குஞ்சுகளுக்குக் கிடைக்கும் உணவில், தன் குஞ்சுகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுவிடக் கூடாதென்பதில் கவனமாக இருக்கின்றது.

காகம், குயில் இரண்டுமே, அடைகாகக்கப்போகும் காகங்களால் எந்தளவுக்கு உணவு வழங்க முடியும், எந்தளவுக்கு அவற்றால் கவனித்துக்கொள்ள முடியும் என்பதில் கவனமாக இருக்கின்றன. அப்படி இல்லாமல், காகங்களின் திற னைவிட அதிகளவில் கூட்டில் முட்டை கள் இருந்தால், தன்னால் அவற்றைக் காப்பாற்ற முடியாதென்பதை உணர்ந்து, காகங்கள் கூட்டை கைவிட்டுவிடுகின்றன. ஒருமுறை ஒரே கூட்டில், 21 முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வளவையும் தன்னால் பராமரிக்க முடியாதென்பதை உணர்ந்து, அந்தக் கூட்டையே காகங்கள் கைவிட்டுவிட்டன. பின்னர், குரங்குகள் அந்த முட்டைகளைச் சாப்பிட்டுத் தீர்த்தன.

இப்படி, தன் இனத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக குயில்கள் காகங்களைச் சார்ந்திருக்கின்றன. அவற்றிடமிருந்து தன் முட்டைகளைக் காப்பாற்ற, காக்கைகள் குயில்களிடம் போராடுகின்றன. இரண்டின் போராட்டத்திற்கும் வெற்றி கிடைக்கின்றது. இறுதியில் இரண்டுமே தம் இனத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. பரிணாமப் பாதையில், காக்கையைச் சார்ந்திருக்கும் வகையில் குயில்கள் தகவமைத்துக் கொண்டன. அவற்றிடமிருந்து தற்காத்துக் கொள்ளவும் காகங்கள் கற்றுக கொண்டன. இருந்தும், இரண்டுக்குமான போராட்டம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. இது இரண்டுக்குமான இனப்பெருக்கக் காலம். இதை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் நேரத்தில்கூட, எங்காவது, ஏதேனும் ஒரு தாய்க் குயில், ஒரு காக்கைக் கூட்டைக் கண்காணித்துக் கொண்டிருக்கலாம். தன் சந்ததிக்குப் புகலிடம் தேடி...

## அர்ச்சுனா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்ய அனுராதபுரம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று இரவு அனுராதபுரம் பொலிஸ் பிரிவின் கல்வல சந்திப் பகுதியில் போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு செய்ததாக வழங்கிய முறைப்பாட்டையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.01.2025 இல் வெளியிடப்பெற்றது.